பக்கங்கள் 12 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 19 வியாழக்கிழமை 02.05.2024 அதிர்வு 276

40 கோடி ரூபா பெறுமதியான

## போதைப்பொருட்களுடன் இருவர் வசமாகச் சிக்கினர்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 40 கோடி ரூபா 04▶



# அமைச்சுப் பதவியை இழந்த நஸீர் வடமேல் ஆளுநராகப் பதவியேற்பு

### தென் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா நியமனம்

தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

அதற்கமைய தென் மாகாணத்தின் புதிய ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவும், வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநராக ஹாபீஸ் நஸீர் அஹமட்டும் இன்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். 04▶



# நான் மைத்திரியின் காவலன் அல்லன்; சுதந்திரக் கட்சியை மீட்பதே என் இலக்கு

### இப்படி விஜயதாஸ கூளுரை

“நான் மைத்திரிபால சிறிசேனவின் காவலன் அல்லன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீட்கவே வந்துள்ளேன். எனவே, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் கட்சியைப் பலப்படுத்த முடியும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக மைத்திரிபால தரப்பால் நியமிக்கப்பட்டவரும் நீதி அமைச்சருமான 04▶



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# புங்குடுதீவு மனிதப் புதைகுழியிலிருந்து பெண்ணொருவரின் எலும்புக்கூடு மீட்பு!

## அகழ்வுப் பணிகள் மதியத்துடன் நிறைவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – புங்குடுதீவு கடற்கரை பகுதியில் மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பாக இன்று காலை ஆரம்பிக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் மதியத்துடன் நிறைவுக்கு வந்தன.

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் அரசினர் வைத்தியசாலையை அண்மித்த பகுதியிலுள்ள தென்பெருந்துறை சதானந்தசிவன் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில் ஆலயச் சூழலில் கிடங்கு வெட்டியபோது, மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் அண்மையில் வெளிவந்தன.

அதனைத் தொடர்ந்தே கிடங்கு வெட்டும் பணிகளை இடைநிறுத்தி அது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்து விரைந்த பொலிஸார், அவ்விடத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்த நிலையில் அவ்விடத்தில் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் அனுமதி கோரி விண்ணப்பம் செய்தனர்.

அதனடிப்படையில் இன்று நீதிமன்றத்தின் அனுமதியுடன் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் நளினி சுபாகரன், சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், தொல்லியல்துறை அதிகாரி மணிமாறன் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள், பொலிஸார், தடயவியல் பொலிஸார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அகழ்வின்போது பெண்ணொருவரினுடையதாகக் கருதப்படும் எலும்புக்கூடு முழுமையாக மீட்கப்பட்டது. எலும்புக்கூட்டுடன் செப்பு நாணயங்கள், துணி, அரிசி துகள்கள் என்பனவும் மீட்கப்பட்டன.

குறித்த பகுதி முன்னைய காலத்தில் மயானமாக இருந்திருக்கலாம் என்றும், குறித்த பெண்ணின் உடல் இந்து முறைப்படி கிரியை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு மற்றும் ஏனைய சான்றுப் பொருட்களைப் பார்வையிட்ட நீதிவான் இது தொடர்பான பகுப்பாய்வு பரிசோதனையை நடத்தி அறிக்கையைச் சமர்ப்பிக்க சட்ட மருத்துவ அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து அப்பகுதியில் அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வந்தன.

மீட்கப்பட்டுள்ள எலும்புக்கூடு மற்றும் சான்றுப் பொருட்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

















# மன்னாரில் கைதான சந்தேகநபர் ஒருவரின் 9 கோடியே 30 இலட்சம் ரூபா சொத்து முடக்கம்

## பொலிஸ், அதிரடிப் படை இணைந்து நடவடிக்கை

**(மன்னார் நிருபர் எஸ். றொசேரியன் லெம்பேட்)**

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுக்திய தேடுதல் நடவடிக்கையின் கீழ் குற்றப் புலனாய்வு பிரிவு கீழ் பணிக்கப்பட்ட விசாரணைக்கு அமைவாக சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மன்னாரில் கைதான சந்தேகநபர் ஒருவரின் 9 கோடியே 30 இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் இன்று முடக்கப்பட்டுள்ளன.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த 43 வயதான சந்தேகநபர் ஒருவருக்குச் சொந்தமான இரண்டு வீடுகள், சொகுசு வாகனம் உள்ளடங்கலாக 9 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் மேற்படி நீதிமன்ற அனுமதியுடன் முடக்கப்பட்டுள்ளன.

மேற்படி சந்தேகநபர் 2002 ஆம் ஆண்டு அரச வீட்டுத்திட்டம் ஒன்றைப் பெற்று இரண்டு படகுகளை வைத்து சாதாரண குடும்பமாக வாழ்ந்து வந்த நிலையில் 2019 பின்னர் குறிப்பிட்ட காலத்துக்குள் பல கோடி சொத்துக்களைச் சேர்த்துள்ளார்.

அதனடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கீழ் இயங்கும் சொத்து முடக்கல் பிரிவினர் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இன்று நீதிமன்ற அனுமதியைப் பெற்று வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜசேகர மேற்பார்வையின் கீழ் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் தலைமையில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் சட்டவிரோத விசாரணைப் பிரிவு பொலிஸாரால் தற்காலிகமாக இன்றில் இருந்து 7 தினங்களுக்குச் சந்தேகநபரின் சின்னக்கடையில் காணப்படும் கடைத் தொகுதியுடன் கூடிய வீடு ஒன்றும், தலைமன்னார் பகுதியில் உள்ள விசாலமான வீடு ஒன்றும், சொகுசு வாகனம் ஒன்றும் முடக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து உயர்நீதிமன்றத்தின் அனுமதியுடன் சொத்துக்களை அரசுடமையாக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கில் சட்டவிரோதமாக சம்பாதித்த சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் முறை என்பதுடன் இது போன்று சட்டவிரோதமாகச் சொத்துக்கள் ஈட்டிய பல்வேறு நபர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.









குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# சு.க. அரசை அமைக்க நாங்கள் தயார்

## ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட விஜயதாஸ தெரிவிப்பு





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் விஜயதாசஸ ராஜபக்ஷவை முன்னிறுத் தவுள்ளதாக அக்கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்த நிலையில், சு.கவின் நேற்றைய மே தினக் கூட்டத்தில் விஜய தாஸ ராஜபக்ஷ, கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்தினார்.

இந்த உரையில் இலங்கையை மீட்டெடுக்கும் வேலைத்திட்டத்தை ஆரம் பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி இரு பிரிவுகளாகப் பிளவுபட்டு அதிகாரப் போட்டியில் சிக்கியுள்ளது. நீதிமன்றத் தீர்ப்பால் மைத்திரிபால சிறிசேன தலைவராகச் செயற்பட முடியாத சூழல் ஏற்பட்டது.

இதனால் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை சு.கவின் பதில் தலை வராக மைத்திரியின் தரப்பு நியமித்தது.

மற்றைய தரப்பின் பதில் தலைவராக நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட் டுள்ளார். இந்தநிலையில் கம்பஹா மாநகர சபை மைதானத்தில் மைத்திரி யின் தரப்பு நேற்று மே தினக் கூட்டத்தை நடத்தியது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ,

"நாட்டை மீட்டெடுக்கும் வேலைத்திட் டத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். சுதந்திரக் கட்சி அரசை அமைக்கவும் நாங்கள் தயாராகவுள்ளோம்.

மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்து 45 நாட்களிலேயே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட பாரிய அதிகாரங்களைக் குறைக்க நடவடிக்கை எடுத்தார்." – என்றார்.

மைத்திரிபால சிறிசேன உரையாற்று கையில்,

"ஊழலை முடிவுக்குக் கொண்டு வருவதை இலக்காகக் கொண்ட கொள் கைகளை நாம் முன்வைக்கவுள்ளோம்.

வீடுகளில் இருப்பதைப் போலவே ஒட்டுமொத்த தேசத்திலும் ஒரு நெருக்கடி உள்ளது. இந்த நெருக்கடிகளைத் தீர்க்க ஊழல் இல்லாத அரசை நாம் உருவாக்க வேண்டும்.தேசத்தை யாரிடம் ஒப்ப டைக்க வேண்டும், யாரைக் கைவிட வேண்டும் என்பதை மக்கள் ஏற்கனவே முடிவு செய்துவிட்டனர்." – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### போதைப்...

பெறுமதியான போதைப்பொருட்களு டன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெண்ணொருவரும் அடங்குகின்றார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின ருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைய கொட்டாவை ருக்மல் சந்தியில் கார் ஒன்று சோதனைக்குட்ப டுத்தப்பட்டது.

இதன்போது ஒரு கிலோகிராமுக்கும் அதிகமான ஹெரோயின் மீட்கப்பட்டது.

இந்தநிலையில் காரில் பயணித்த சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின்போது அந்தப் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் உள்ள வீட்டில் சோதனை நடத்தப்பட்டது.

அதன்போது 12 கிலோகிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

அத்துடன் போதைப்பொருள் வர்த் தகத் தால் ஈட்டப்பட்டது எனச் சந்தே கிக்கப்படும் 15 இலட்சம் ரூபாவும் மீட்கப்பட்டது.

கைதான சந்தேகநபர் குறித்த பகுதியில் உள்ள வீடொன்றை வாடகைக் குப் பெற்று அதில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அவர் இரண்டு வீடுகளுக்கு உரிமையாளர் என்பது கண்டறியப்பட் டதுடன் அங்கும் சோதனைகள் நடத் தப்பட்டன.

குறித்த இரண்டு வீடுகளில் ஒன்றில் கொக்கெய்ன் மற்றும் ஐஸ் ரக போதைப் பொருட்களும் மீட்கப்பட்டன.

இதன்போது சந்தேகநபரின் மனை வியும் பொலிஸ் விசேட அதிரடிப் படை யினரால் கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் டுபாயில் தலைமறை வாகியுள்ள திட்டமிட்ட குற்றச் செயல்க ளுடன் தொடர்புடைய வாசன சமந்த பெர்னாண்டோ எனப்படும் டுபாய் கபில வுக்குச் சொந்தமானது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர்.

### அமைச்சுப்...

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் இதன்போது கலந்து கொண்டிருந்தார்.

கிழக்கு மாகாண முன்னாள் முதல மைச்சராகப் பதவி வகித்த ஹாபீஸ் நஸீர் அஹமட், இந்த அரசில் சுற்றாடல் அமைச்சராக இருந்தார். எனினும், உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் அவர் நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந் ததால் அமைச்சுப் பதவியும் இல்லாமல் போனது.

### நான் மைத்திரியின்...

விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"நான் பதவிகளுக்காகச் சண்டையிடு பவன் அல்லன். சுதந்திரக் கட்சியைக் கைப்பற்றும் நோக்கமும் கிடையாது. கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கிலேயே பதவியை ஏற்றேன். இதன் பின்னணியில் வேறு சூழ்ச்சி எதுவும் இல்லை.

சுதந்திரக் கட்சியில் உள்ள எந்தவொரு தரப்புடனும் எனக்குப் பிரச்சினை இல்லை. நிமல் சிறிபால டி சில்வா, துமிந்த திஸா நாயக்க உள்ளிட்டவர்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளேன்.

ஒன்றிணைந்தால் கட்சியைப் பலப்படுத்தலாம். கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார்." – என்றார்.



# சர்வதேச மட்ட கணித ஒலிம்பியாட் கல்முனை ஸாஹிறா மாணவன் தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இம்முறை இடம்பெற்ற தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் கல்முனை ஸாஹிறா கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் கிழக்கு மாகாணம் சார்பாக பங்கேற்று சர்வதேச மட்டப் போட்டி குழுவுக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

கல்முனை ஸாஹிறா கல்லூரியில் தரம் ஆறு (06) பிரிவில் கல்வி கற்கும் அபுல் ஹக்கம் றமீஸ் முஹம்மட் றஹ்மி தேசிய மட்ட போட்டியில் வெற்றி பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

வெற்றிபெற்ற மாணவனைப் பயிற்றுவித்து வழிப்படுத்தி ஊக்குவித்த கல்லூரியின் கணிதபாட இணைப்பாளர் ஏ.எச். எம்.றிஸான் மற்றும் கல்லூரியின் கணிதப்பாட ஆசிரியர்கள், கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர் அனைவருக்கும் கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

# சாய்ந்தமருதில் கலை இலக்கிய விழா



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கலாசார அலுவல்கள் திணைக்களமும், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார பிரிவும் இணைந்து நடத்திய அம்பாறை மாவட்ட பிரதேச கலை இலக்கிய விழா சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் (25) இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அதிதிகளாக அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் றீ.எம். றிம்ஸான், நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ். நளீர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி. முஹம்மட், கலாசார உத்தியோகத்தர் ஏ.எல். எம். தௌபீக், ஓய்வு பெற்ற கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஸ்ரப், பிரதேச கலாசார அதிகார சபையின் செயலாளர் கே.எம்.ஏ.அஸீஸ், பொருளாளர் அஸ்வான் சக்காப் மௌலானா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபிக்காவின் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் அதிதிகளின் உரை, கலை கலாசார நிகழ்வுகள், பிரதேச மட்ட நிகழ்வுகளில் வெற்றி பெற்றோருக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் எனப் பல நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பாலர், சிறுவர், கனிஷ்ட, சிரேஷ்ட, அதி சிரேஷ்ட மற்றும் திறந்த பிரிவுகளில் சுமார் 56 பேர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான கௌரவம் இதன் போது வழங்கப்பட்டது.

இவர்களில் சாய்ந்தமருதில் உள்ள இலக்கியத்தில் ஆர்வமுள்ள மாணவ, மாணவிகள் மற்றும் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பல பிரிவினரும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# போராட்ட மன நிலை

மந்திரத்தால் மாங்காய் வீழ்த்தும் மாயா ஜாலக்காரர்கள் யார் என்று கேட்டால் நம் மக்கள் நமது அரசியல்வாதிகள் என்று பட்டென்று கூறிவிடுவர். அத்தனை வித்தைக்காரர்கள் நமது அரசியல்வாதிகள்.

தங்கள் கருத்தை மக்கள் மனதினுள் செலுத்துவதற்காக தத்துவங்களை தமக்கு ஏற்றவாறு புரட்டிப் போடுவதில் மகாசமர்த்தர்கள் அவர்கள்.

அந்த வகையில் போராட்டத்தைப் பற்றி புதிய தத்துவத்தைத் தமது கருத்தியலுக்கு ஏற்ப புரட்டிப் போட்டிருக்கிறார் நமது நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன். சட்டையில் ஊத்தை படாமல், வியர்வை சிந்தாமல், பாடு படாமல், பாடுகளைச் சுமக்காமல் ஒரு போராட்டம் நடத்துவது குறித்து அவர் இப்போது உபதேசம் செய்திருக்கின்றார்.

'மனித சங்கிலிப் போராட்டம்' என்று ஆரவாரமாக அழைப்பு விட்டு, அலப்பறை செய்த நமது அரசியல்வாதிகள், வீதிகளுக்கு மக்களை இறக்க முடியாத தங்களது வக்கற்ற - வகையற்ற - திராணியற்ற - கையாலாகாத - தனத்தைப் புரிந்து கொண்டு, 'வீட்டுக்குள் இருந்து மக்கள் போராடுகின்றார்கள்' என்ற பாவனையைக் காட்டும் விதமாக மனித சங்கிலி போராட்டத்தை ஹர்த்தாலாக மாற்றிய அதிபுத்திசாலிகள்.

அந்தப் பிடியைத் தாமும் பிடிக்கின்றார் நீதியரசர் விக்னேஷ்வரன். முதலில் போராட்டம் குறித்து -

''....... போராட்ட மனோநிலையை நாங்கள் கைவிட்டோமானால் இழந்த உரிமைகளை நாம் திரும்பவும் பெறமுடியாது. ஆயுதமேந்திப் போராடுவது மட்டும் போராட்டம் என்று நாம் நினைக்கக்கூடாது. போராடும் போது செயல்திறனும் செயல்நுட்பமும் எமக்கு அவசியம். அவ்வாறான ஒரு மன நிலையில்தான் இன்று ஒரு தமிழ்ப்பேசும் பொதுவேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் களம் இறக்கவேண்டும் என்று சொல்லி வருகின்றோம்.'' - என்று கருத்து தெரிவிக்கின்றார்.

தொடர்ந்து புதிய போராட்ட உத்தி தொடர்பான தமது தத்துவத்தை மெல்ல அவிழ்க்கின்றார்.

''....... பெரும்பான்மையினரின் அதிகார பலத்தினுள் சிக்குப்பட்டுத் தத்தளிக்கும் வடகிழக்குத் தமிழ்பேசும் மக்கள், எமது தொழிலாள முன்னோடிகள் முன்னர் போராடியதை போல் புதுப்புது போராடும் உத்திகளைகடைப்பிடித்து, எமது தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைத் திரும்பப்பெற முயற்சிசெய்யவேண்டும்.''- என்று கதை விடுகின்றார் அவர்.

அவரது அடுத்த கட்ட விளக்கம்தான் மிகவும் 'உசத்தி'யானது.

''........ முன்னர் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றவாறு தமிழர்களாகிய நாம் எமது வருங்கால சந்ததியினரை மனதில் வைத்து சில போராட்டங்களில் ஈடுபட வேண்டும். வன்முறை தேவையில்லை. பட்டினி கிடக்க அவசியமில்லை. ஆனால் பொது வேட்பாளரை முன் நிறுத்தி எமது தமிழ்ப் பேசும் உறவுகளை ஒன்றிணைத்து எமக்கென உலக அரங்கத்தில் சில நன்மைகளைப் பெற முயற்சிப்பதே இந்தப் போராட்டம்.''

- என்று உபதேசிக்கிறார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

ஆக, வன்முறை போராட்டம் தேவையில்லை என்பதன் மூலம் பிரபாகரன் வழி வேண்டாம் என்கிறார். அதுவும் சரிதான். பட்டினி கிடக்க அவசியமில்லை என்பதன் மூலம் காந்தியின் மார்க்கமும் செல்வாவின் வழிகாட்டலும் அவுட்!

இனி மிஞ்சி இருப்பது வாக்குச்சாவடிக்கு போய் வாக்களிக்கும் போராட்ட அரசியல் தான்.

ஜனநாயக அரசியலில் உப்புச் இல்லாத எண்ணிக்கையினரான - மிகச் சிறுபான்மையினரான - தமிழர்களுக்கு இனி மிஞ்சி இருப்பது வாக்குச்சாவடிக்கு போய் வாக்களிக்கும் போராட்ட அரசியல்தான். அந்த உப்புசப்பற்ற போராட்ட வடிவத்தின் மூலம் தங்களை மக்கள் பிரதிநிதியாக்கும் சுயநல அரசியலோடு தத்துவம் பிளக்கின்றார் விக்னேஸ்வரன்.

தங்களைப் போன்று ஒரு பிரதிநிதியை தெரிவு செய்வதற்கு - அல்லது தெரிவு செய்யாமல் விடுவதற்கு - வாக்களிப்பு நிலையத்துக்கு போய் அவர் காட்டும் வழியில் வாக்களித்து விட்டால் விடயம் முடிந்து விடும் என்ற பாணியில் இவர்கள் விடும் அறிவிப்புக்கள்தான் உண்மையில் மக்களின் போராட்ட சிந்தனையை - மன எண்ணத்தை - தகர்ப்பன.

தேர்தல்களில் தங்கள் இலக்குகளை அடைவதற்காக போராட்ட வழிமுறைகளில் செயல் திறனும் நுட்பமும் அவசியமென்று தத்துவம் கூறி, மக்களின் போராட்ட மன நிலையை வாக்களிப்பு அரசியலுக்குள் குதர்க்கம் பண்ணும் இத்தகைய அரசியல் வாதிகள் தங்களின் ஓய்வு கால அரசியலுக்காகவும் பொழுதுபோக்கு நடத்தைகளுக்காகவும் தமிழரின் விடுதலை அரசியலை கொச்சைப்படுத்தக் கூடாது.

தேர்தல் அரசியலுக்காக நீங்கள் எதுவும் செய்யுங்கள். எந்த மட்டத்திற்கும் கீழே போங்கள்.

ஆனால் குறைந்தபட்சம் தன்னை வருத்தியாவது இனத்துக்குப் போராட வேண்டும் என்ற கருத்தியல் எண்ணத்தை வாக்கு அரசியலுக்காக சிதறடிக்க முயலாதீர்கள்.

ஆயுத வழிப் போராட்டம் தோற்றுவிட்டது. இனி எஞ்சி இருப்பது தன்னை வருத்தி முன்னெடுக்கக்கூடிய அஹிம்சை மார்க்கப் போராட்டம்தான். அதில் இருக்கும் ஈடுபாட்டை கொச்சைத்தனமான வாக்கு அரசியலுக்காகக் குறைத்து மதிப்பீடு செய்து விடாதீர்கள்..!



# அலிக்கம்ப தேவ கிராமத்தில் வாழும் மக்கள் பிரச்சினைகள் பற்றி ஆராய்வு

(எம்.எப்.றிபாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் அலிக் கம்ப தேவ கிராமத்தில் வாழும் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் செயற்றிட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின் றன என்று ஐடோவ் இளையோர் அமைப் பின் உறுப்பினர் அப்தான் தெரிவித்தார்.

விழுது நிறுவனத்தின் வழிகாட்டலின் கீழ் ஸ்கோப் திட்டத்தின் மூவின இளை ஞர்கள் முன்வந்து அலிக்கம்ப தேவ கிராம சமூகத்தினரின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் 'ஓரங்கட்டப்பட்ட சமூகத்துக்கான இளையோரின் குரல்'எனும்தொனிப்பொருளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் இடம்பெற்றது.

ஏனைய சமூகத்துடன் அவர்களை ஒன்றிணைத்து வாய்ப்புக்கள் மற்றும் வளங்களையும் பெற்று நிலைபேறான நல்லிணக்கத்தை மக்கள் மத்தியில் உருவாக்குதல் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் என அப்தான் மேலும் தெரிவித்தார்.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மைய நிறுவனத்தின் சமூக ஒருங்கிணைப் பாளர் பி. முரளீதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அருட் தந்தை உட்பட சமூதாய சீர்திருத்த உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். இக்ராம் அம்பாறை மாவட்ட தொழில் வழிகாட்டல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள், இளையோர் அமைப்பினரும் கலந்து கொண்டனர்.

தமது அதிகார சபையால் கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ள மாணவர்கள் இணைந்து கொள்ள முடியும் என்று இதன்போது அம்பாறை மாவட் தொழில் வழிகாட்டல் அதிகாரசபை உத்தியோ கஸ்தர் எம். எப்.றிபாஸ் குறிப்பிட்டார்.



# மன்னாரில் இருந்து 20 சாமியார்கள் முல்லை. வற்றாப்பளைக்கு யாத்திரை

(மன்னார் )

முல்லைத்தீவு வற்றாப்பளை கண் ணகி அம்மன் ஆலய நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் மன்னாரைச் சேர்ந்த 20 சாமியார்கள் நேற்று புதன் கிழமை மன்னார் செல்வநகர் அம்பாள் ஆலயத்தில் வைத்து மாலை அணி விக்கப்பட்டுள்ளனர். மன்னார் செல்வநகர் அம்பாள் ஆலயத்தில் எதிர் வரும் 12ஆம் திகதி மண்டல பூஜையும் மதிய அன்னதானமும் வழங்கப்பட வுள்ளன.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 15 ஆம் திகதி மன்னார் செல்வநகர் அம்பாள் ஆலயத்தில் இருந்து முல் லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தை நோக்கி குறித்த சாமியார்கள் யாத்திரை ஆரம்பிக்க உள்ளனர்.

20 ஆம் திகதி காலை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்து தமது விரதத்தைப் பூர்த்தி செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.




# காத்தான்குடியில் ஒரு லட்சம் மரநடுகை வேலைத் திட்டத்தில் நேற்றும் மர நடுகை!

(பழுலூரான்)

காத்தான்குடி ஒக்சி கார்டன் பசுமைக் கழகத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்தில் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடும் வேலைத் திட்டத்தின் கீழ் காத்தான்குடி கப்பல் ஆலிம் வீதியில் பயன் தரும் வீதியோர மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (01) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கழகத்தின் தலைவர் எம். ஐ. எம். கமால்தீன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில், காத்தான்குடிப் பிரதேச செயலாளர் யு. உதயஸ்ரீதர், காத்தான்குடி நகர சபையின் செயலாளர் திருமதி.றிப்கா சபீன், காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கஜ நாயக்க, சமூக நலப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஜவாஹிர், மீரா பள்ளி வாசலின் உபதலைவர் ஆர்.ஏ. வஹாப், உதவும் கரங்கள் நிறுவனத்தின் தலைவர் சிறாஜ், யஸ்டோ அமைப்பின் தலைவர் நிஸ்ர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மரம் வளர்ப்பதன் அவசியம் பற்றியும், எதிர்காலச் சந்ததியினர் தீய வழியில் சென்று விடாமல் அவர்களைப் பாதுகாக்கும் ஒரு பொழுது போக்காகவும் பயனுள்ள ஒரு விடயமாகவும் அமைந்திருப்பதாக இந்த நிகழ்ல் கலந்து கொண்ட அதிதிகள் தமது உரைகளில் குறிப்பிட்டிருந்தனர்.

அத்தோடு நகர்ப் பகுதிகளில் காணப்படும் கட்டடங்களின் வெப்ப நிலையைத் தவிர்த்து சுத்தமான காற்றைச் சுவாசிக்கக் கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்க முடியும் என்ற கருத்துக்களும் பகிரப்பட்டன. நிகழ்வில் இந்தப் பகுதியில் உள்ள பொது மக்கள் கலந்து கொண்டனர். அதிதிகளுக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.





# ஒலுவில் பிரதேசத்துக்கு இந்திய தூதர் விஜயம்!

(எம்.ஏ.றமீஸ்)

ஒலுவில் துறைமுகம் அமைந்துள்ள பிரதேசத்தைப் பார்வையிடுவதற்கும், அதன் அபிவிருத்தி தொடர்பில் மேலதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கும் நேற்று (01) இந்திய தூதர் சந்தோஷ் ஜா ஒலுவில் பிரதேசத்துக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் வேண்டுகோளின் பேரில் இந்த விஜயம் அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

ஒலுவில் துறைமுகத்தையும் அதை சூழவுள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும், அப்பிரதேசத்தில் ஏற்படும் கடலரிப்பு தொடர்பிலும் விரிவான கலந்துரையாடல் ஒன்று அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிம், முன்னாள் மாகாண அமைச்சர்களான எம்.எஸ். உதுமாலெவ்வை, எம்.ஐ.எம்.மன்சூர் ஆகியோரும் இதன்போது கலந்து கொண்டனர்.










# பொத்துவில் மத்திய கல்லூரியில் தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறி

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

2023 இல் உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்காக கல்வி அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வரும் முதலாவது செயற்றிட்டமான தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறி கடந்த திங்கட்கிழமை பொத்துவில் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

தகவல் தொழிநுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய 120 மணித்தியாலங்கள் கொண்ட மூன்று மாத பாடநெறியின் இறுதி நாள் நிகழ்வு இவ்வாறு நடைபெற்றது.

இந்தத் திட்டத்தில் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட 299 பாடசாலைகளில் பொத்துவில் மத்திய கல்லூரியும் ஒன்றாகும். இந்த மத்திய கல்லூரியில் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டு, இடம்பெற்று வந்த நிகழ்ச்சித் திட்டத்தில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து பயனடைந்தனர்.

அந்த வகையில் அந்த மாணவர்கள் வெகு விமர்சையாக நிகழ்வை ஏற்பாடு செய்ததுடன் அவர்களுடைய கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்குப் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ. பிர்னாஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். தென்கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி டாக்டர் எம்.எச். ஹாரூன், ஊக்குவிப்புப் பேச்சாளர் சொஹைர் ஏ. காதர் மற்றும் கல்வி அதிகாரி எம்.எஸ். நபீஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் பாடசாலைகளது அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.






# சாய்ந்தமருது பாடசாலைக்கு விஜயம் செய்தார் ஹக்கீம்!




**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விஜயம் செய்துள்ளார்.

பாடசாலையின் அண்மைகால ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அடைவுகள் குறித்து வாழ்த்துகள் தெரிவிப்பதற்காக திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். பாடசாலையில் நிலவும் தேவைப்பாடுகள் தொடர்பிலும் இதன்போது கேட்டறிந்து கொண்டார்.

இதன் போது பாடசாலையில் நிலவும் இடத்தட்டுப்பாடு மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றியும் ரவூப் ஹக்கீமுக்கு பாடசாலை அபிவிருத்திக் குழுவால் தெளிவூட்டப்பட்டது.

இந்த விஜயத்தின் போது முன்னாள் கல்முனை மாநகர சபை மேயர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப்பும் கலந்து கொண்டார்.

பாடசாலை சார்பாக அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ், உதவி அதிபர் எம்.ஏ.ஸீ.எல்.நஜீம் மற்றும் அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.





# பரத நாட்டிய அரங் கேற்றம்

நாட்டிய கலா மந்திர் ஸ்தாபக இயக்குநர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ் வரனின் மாணவிகளும், கிரிசங்கர்– தாரணி தம்பதியினரின் புதல்விகளுமான செல்வி அபிகநத்ரி கிரிசங்கர், செல்வி மஞ்சரி கிரிசங்கர் ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றமும் செல்வி சாதுரி கிரிசங்கரின் சலங்தை பூஜையும் எதிர்வரும் 11 ஆம் திகதி மாலை 5.30 மணிக்குப் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த அரங்கேற்ற நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக, வடமேல் மாகாண முன்னாள் ஆளுநர் கே.சி. லோகேஸ் வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ அதிதிகளாகப் பம்பலப்பிட்டி திருக் குடும்ப கன்னியர் மடத்தின் அதிபர் அருட்சகோதரி சரிதா தண்டல்கே, பிரபல நாட்டியக் கலைஞர் “கலைச் செம்மல்” திருமதி பாலசுந்தரி பிராதலிங்கம் மற்றும் கசால் சவுண்ட்ஸ் அக்டமியின் ஸ்தாபக இயக்குனர் திருமதி சௌந்தரி டேவிட் ரோட்ரிகா ஆகியோரும் கலந்து கொள்வர்.

‘கலாசூரி’, ‘ஆச்சார்ய கலா சாகர’ ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நெறியாள்கையில் நடைபெறும் அரங்கேற்ற நிகழ்வில் ஸ்ரீ அருணந்தி ஆரூரன் (குரலிசை), ஸ்ரீசண் முகலிங்கம் நாகராஜன் (மிருதங்கம்), ஸ்ரீ சண்முகநாதன் திபாகரன் (வயலின்), ஸ்ரீரட்ணம் ரட்ணதுகர (தாளதரங்கம்), ஸ்ரீ பிரியந்த தசநாயே (புல்லாங்குழல்), ஸ்ரீ என்.எஸ். வாகீசன் (வீணை) ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

## ஏறாவூர் நகர் - ஓட்டுப்பள்ளி வட்டாரத்தின்

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்புக் கூட்டம்

(கே. எ. ஹமீட் )

ஏறாவூர் நகர் – ஓட்டுப்பள்ளி வட்டாரத்தின் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகள் புனரமைப்புக் கூட்டம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதிஉயர்பீட உறுப்பினரும், முன்னாள் ஏறாவூர் நகர சபை தவிசாளருமான எம்.எஸ்.நளீம் தலைமையில் ஏறாவூரில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கிம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், மட்டகளப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அலிசாஹிர் மௌலானா, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் அமைச்சரும், ஆளுநருமான எம்.எல்.ஏ.ஹிஸ்புல்லா, பிரதி தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அரசியல் அதி உயர்பீட உறுப்பினரும் கல்குடா தொகுதி அமைப்பாளருமான சட்டத்தரணி ஹபீப்றிபான், அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன் மற்றும் முன்னாள் நகர சபை உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.







# பாலியல் சித்ரவதை முறைப்பாடுகளில் சிக்கியுள்ள பிரஜ்வல் ரேவண்ணா எம்.பி. ஜேர்மனிக்கு ஓட்டம்!

கர்நாடகா அரசியலில் ஹாசன் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய ஜே.டி.எஸ். வேட்பாளருமான பிரஜ்வல் ரேவண்ணா மீது எழுந்துள்ள பாலியல் சித்ரவதை தொடர்பான புகார் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியில் தலைமறைவாக உள்ள பிரஜ்வல் ரேவண்ணாவுக்கு 'லுக் அவுட்' நோட்டீஸ் விடப்பட்டுள்ளது.

300-க்கும் மேற்பட்ட பெண்கள், அரசு அதிகாரிகளை மிரட்டி பிரஜ்வல் ரேவண்ணா பலாத்காரம் செய்து அதை 2,976 ஆபாச வீடியோக்களாக எடுத்து பென் டிரைவ்வில் வைத்திருக்கிறார் என முறைப்பாடு எழுந்துள்ளது. அத்துடன் பிரஜ்வல் ரேவண்ணாவுடன் பல பெண்கள் நெருக்கமாக இருக்கும் வீடியோக்களும் அடுத்தடுத்து வெளியானதால், அவர் மீதும் அவரது தந்தை ரேவண்ணா மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக கர்நாடகாவில் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில, தனது பாஸ்போர்ட்டை பயன்படுத்தி பெங்களூருவில் இருந்து இரவோடு இரவாக ஜெர்மனிக்கு பிரஜ்வல் ரேவண்ணா தப்பிச் சென்றார்.

பாலியல் முறைகேடு குறித்து விசாரிக்க எஸ்.ஐ.டி. அமைக்கப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு அவர் தலைமறைவானார். பிரஜ்வல் ரேவண்ணாவின் தூதரக பாஸ்போர்ட்டை ரத்து செய்யவும், தப்பியோடிய எம்.பி.யை மத்திய அரசு அலுவலகங்களைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு அழைத்து வருவதை உறுதி செய்யவும் தலையிடுமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்று கர்நாடக முதல் மந்திரி சித்தராமையா கடிதம் எழுதியிருந்தார்.

இந்நிலையில், விசாரணைக்கு தேவையான போது பிரஜ்வல் இந்தியா திரும்புவார் என்று அவரது தந்தை எச்.டி.ரேவண்ணா கூறினார்.

இந்த நிலையில், பிரஜ்வல் ரேவண்ணாவை எஸ்.ஐ.டி. குழு விசாரிக்க வேண்டியதுள்ளது. இதன் காரணமாக ஜேர்மனியில் தலைமறைவாக உள்ள பிரஜ்வலை இந்தியா அழைத்து வரவேண்டும். இதற்காக அனைத்து விமான நிலையங்களுக்கும் கர்நாடகா அரசு சார்பில் லுக் அவுட் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அதன் மூலம் பிரஜ்வல் ரேவண்ணா ஆஜரானவுடன், அவரை காவலில் எடுத்து விசாரிக்க எஸ்ஐடி தயாராகி வருகிறது. இதனிடையே, சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி.) விசாரணைக்கு 7 நாள்கள் அவகாசம் அளிக்க வேண்டும் என்று பிரஜ்வல் ரேவண்ணா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சொந்த மகள்மார் இருவரை துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு மூன்று ஆயுள்காலச் சிறை

திருவனந்தபுரம், மே. 02

சிறுமிகளான தனது இரண்டு மகள்களை பலாத்காரம் செய்த தந்தைக்கு மூன்று ஆயுள் தண்டனை விதித்து திருவனந்தபுரம் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தை சேர்ந்த 40 வயது தொழிலாளிக்கு மனைவியும், 6 மற்றும் 8 வயதில் என 2 மகள்களும் உள்ளனர். தொழிலாளியின் மனைவி வேலையின் நிமித்தமாக வேறொரு இடத்தில் தங்கி உள்ளார். இதனால் மகள்கள் 2 பேரும் சில நாள்கள் தந்தையின் வீட்டிலும், சில நாள்கள் பாட்டியின் வீட்டிலும் வளர்ந்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 6 வயதான சிறுமிக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதைதொடர்ந்து சிறுமியின் பாட்டி அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு டாக்டர்கள் அவரை பரிசோதனை செய்த போது, சிறுமி பலாத்காரம் செய்யப்பட்ட அதிர்ச்சித் தகவல் வெளியானது.



இதுபற்றி டாக்டர்கள் பொலிஸுக்குத் தெரிவித்தனர். அதன்பேரில் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

அப்போது, சிறுமியிடம் மதுபோதையில் அவரது தந்தையே அத்துமீறிய கொடூர சம்பவம் வெளியானது. மேலும் அவர் 8 வயதான மகளையும் பலாத்காரம் செய்தமையும் தெரியவந்தது. பின்னர் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து தந்தையை கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு திருவனந்தபுரம் விரைவு நீதிமன்றில் நடந்து வந்தது. இந்த வழக்கில் நீதிபதி தீர்ப்பு வழங்கினார். அதில் ஒரு மகளை பலாத்காரம் செய்ததற்கு ஓர் ஆயுள் தண்டனையும், மற்றொரு மகளை பலாத்காரம் செய்ததற்கு ஓர் ஆயுள் தண்டனையும், தந்தை என்ற பெயருக்கும், நம்பிக்கைக்கும் களங்கம் ஏற்படுத்தியதற்கு ஓர் ஆயுள் தண்டனையும் என 3 ஆயுள் தண்டனையும், ரூ.90 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. அபராத தொகை கட்ட தவறினால் கூடுதலாக ஓராண்டு சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும். மேலும், இந்த தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்கவும் எனத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

# அமெ.கல்லூரிகள், பல்கலைகளில் கலவர தடுப்புப் பொலிஸ் குவிப்பு!

## எரிச்சலூட்டும் இரசாயன வெடிமருந்துகளை பயன்படுத்துகின்றனர்



காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் போருக்கு எதிராகவும், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் அமெரிக்காவில் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. பொது வெளியில் நடந்த போராட்டங்கள் நாளுக்கு நாள் தீவிரமடைந்து, கல்வி நிறுவனங்களுக்கும் பரவி உள்ளன. இதனால் பிரபல பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் போராட்டக்களமாக மாறி உள்ளன.

காசாவில் போர்நிறுத்தம், இஸ்ரேலுக்கான அமெரிக்க இராணுவ உதவியை நிறுத்துதல், ஆயுத விநியோகம் மற்றும் போரினால் பயனடையும் நிறுவனங்களில் இருந்து பல்கலைக்கழக முதலீடுகளை திரும்பப் பெறுதல் உள்ளிட்ட கோரிக்கைகளை, போராட்டம் நடத்தும் மாணவர்கள் வலியுறுத்துகின்றனர். தடையை மீறி போராட்டங்களில் ஈடுபடும் மாணவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

கைது நடவடிக்கையையும் மீறி மாணவர்கள் ஆங்காங்கே ஒன்றுதிரண்டு போராட்டம் நடத்துகின்றனர். இதனால் அவர்களை பொலிஸார் அப்புறப்படுத்திப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு பல்கலைக்கழக வளாகங்களில் கலவரத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாக பேராட்டம் நடத்தும் மாணவர்களைக் கலைப்பதற்காக எரிச்சலூட்டும் ரசாயன வெடிமருந்துகளை பொலிஸார் பயன்படுத்துகின்றனர்.

லொஸ் ஏஞ்சல்சில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று வன்முறை வெடித்தது. பாலஸ்தீன ஆதரவு போராட்டக்குழுவினரின் முகாம் அருகே உள்ள உள்ள தடுப்புகளை இடித்துத் தள்ளப் பொலிஸார் முயன்றனர். அவர்கள் மீது பாலஸ்தீன ஆதரவு போராட்டக. குழுவினர் பெப்பர் ஸ்பிரே தெளித்து விரட்டினர். இந்த மோதலைத் தொடர்ந்து அங்கு கூடுதல் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். பத்துக்கும் மேற்பட்ட வாகனங்களில் போலீசார் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர அதிகாரிகள் நேற்று இரவு பல்கலைக்கழக வளாகத்திற்குள் சென்றனர். இதையடுத்து அங்கு பொலிஸார் தயார் நிலையில் நிறுத்தப்பட்டனர்.

அமெரிக்காவின் புகழ்பெற்ற இந்தப் பல்கலைக்கழகங்களில் ஹெல்மெட் அணிந்த கலவர தடுப்பு பிரிவு பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தமையைப் பார்த்த மாணவர்கள் திகைப்படைந்தனர்.

"இவ்வளவு பொலிஸ் படை இருக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை, ஆனாலும், நாளுக்கு நாள் போராட்டம் தீவிரமடைவதால் இது அவசியம்" - என கொலம்பியா பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொலம்பியா மற்றும் நியூயார்க் நகர பல்கலைக்கழகங்களில் ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்றியபோது பொலிஸார் தாக்கினர் எனவும், முரட்டுத்தனமாக கைது செய்தனர் எனவும் சில மாணவர்கள் குற்றம்சாட்டினர். சுமார் 6 மணி நேரம் காவலில் வைத்திருந்து அதன்பிறகே தங்களைப் பொலிஸார் விடுவித்தனர் எனவும் அவர்கள் கூறினர்.

# வடக்கு இந்தோனேசியாவில் வெடித்துச் சிதறும் எரிமலை!

## ஏழு விமான நிலையங்கள் மூடப்பட்டன

ஜகார்த்தா,மே02

இந்தோனேசியாவின் வடக்கு சுலவேசி மாகாணத்தில் உள்ள ருயாங் தீவில் உள்ள எரிமலை ஒன்று கடந்த மாதம் கரும்புகையை கக்கியபடி வெடித்து சிதற தொடங்கியது. பின்னர் அமைதியான நிலையில் கடந்த சில நாள்களாக இருந்த அந்த எரிமலை மீண்டும் வெடித்துச் சிதறத் தொடங்கி உள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்த தீவில் உள்ள எரிமலை அடிவார குடியிருப்புகளில் வசித்து வந்த 12 ஆயிரம் பொதுமக்கள் மீட்கப்பட்டனர்.



எரிமலை வெடிப்பை தொடர்ந்து கண்காணித்து வரும்நிலையில் அதன் தாக்கம் அதிகமாக இருப்பதையடுத்து அங்குள்ள கல்வி நிறுவனங்களான பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டன.

இதனையடுத்து சுற்றுலா பயணிகளின் வருகையை தவிர்க்கும் வகையில் சர்வதேச விமான நிலையமான சாம் ரதுலங்கி உள்பட 7 விமான நிலையங்கள் மூடப்பட்டன.

பக்கங்கள் - 5

கனடா முரசு

வியாழக்கிழமை 02/05/2024

## சபாநாயகரைச் சாடும் எதிர்க்கட்சிகள் தரப்பு

ஒன்ராரியோ, மே 02

சபாநாயகர் பதவி விலக வேண்டும் எதிர்க்கட்சி நாடாளுமன்றத்தில் கோரியுள்ளது.

C2 ▶



# இந்த வரவு - செலவுத் திட்டத்தினால் பணவீக்கத்தில் மாற்றம் இல்லையாம்

ஒன்ராரியோ, மே 02

மத்திய அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் நாட்டின் பணவீக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாது என கனடிய வங்கியின் ஆளுனர் டிஃப் மெக்லெம் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் அண்மைய வட்டி வீத அதிகரிப்பு தொடர்பில், சிரேஷ்ட பிரதி ஆளுனர் கரோலின் ரொஜர்ஸுடன் செனட் குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள செலவீனத் திட்டமானது மத்திய அரசாங்கத்தின் நிதிப் பாதையில் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என ஆளுனர் மெக்லெம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்காரணமாகவே, வரவு - செலவுத் திட்டம் பணவீக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை என தாம் கருதுவதாக அவர் கூறியுள்ளார்.



## வரவு – செலவுத் திட்டத்தை ஆதரித்து புதிய ஜனநாயகக் கட்சி வாக்களிக்கும்

ஒன்ராரியோ, மே 02

மத்திய அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக புதிய ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

ஆளும் லிபரல் கட்சியின் பங்காளியாக இருக்கும் புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு – செலவுத் திட்டத்தின் சில அம்சங்கள் தொடர்பில் பகிரங்கமாக விமர்சனங்கள் எழுப்பி வந்தனர்.

இதனால், இவர்கள் வரவு – செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள்

C2 ▶

## திருடன் – பொலிஸ் வாகன ஓட்டத்தால் நேர்ந்த விபத்து நான்கு பேர் உயிரிழப்பு


கனடாவில், மதுபானக்கடை ஒன்றில் திருடியதான சந்தேகத்தின்பேரில் நபர் ஒருவரை பொலிஸார் துரத்த, அதனால் ஏற்பட்ட விபத்தில், குழந்தை ஒன்று உட்பட நான்கு பேர் பலியான பயங்கரம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

திங்கட்கிழமையன்று, இரவு 8.10 மணியளவில், ஒன்ராறியோவிலுள்ள ஊடயசபைவெழஎ என்னுமிடத்தில், மதுபானக்கடை ஒன்றில் ஒருவர் திருட முயல்கிறார் எனபத் தகவல் கிடைத்ததையடுத்து பொலிஸார் அந்த நபரைப் பிடிக்க முயல, அவர் வான் ஒன்றில் ஏறித் தப்பிக்க முயன்றுள்ளார்.

அவர் தவறான திசையில் செல்ல, பொலிஸாரும் அவரைத் துரத்தியுள்ளார்கள். அவர்கள் முரட்டுத்தனமாக பொலிஸ் வாகனத்தை இயக்கியுள்ளனர் என உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

C2 ▶





# இருநூறு குழந்தைகளுக்கு தந்தையாகிய இரண்டு பேர்

## கியூபெக் மாகாணத்தில் அதிர்ச்சியான நிகழ்வு

இரண்டு பேர் இருநூறு குழந்தைகளுக்கு தந்தையாகியுள்ளனர் என்றால் நம்ப முடிகின்றதா? கனடாவில் இவ்வாறான ஓர் சம்பவம் பதிவாகியுள்ளது.

கனடாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு ஆண்கள் சுமார் 200 பிள்ளைகளுக்கு தந்தையாகியுள்ளனர்.

இந்த இருவரும் விந்தணு தானம் செய்ததன் மூலம் இவ்வாறு 200 பிள்ளைகளுக்கு தந்தையாகியுள்ளனர்.

இவர்கள் சமூக ஊடகங்களில் விளம்பரம் செய்து விந்தணு தானம் செய்துள்ளனர்.

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் இந்த அதிர்ச்சியான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாகாணத்தின் பல்வேறு இடங்களைச் சேர்ந்த பெண்களுக்கு விந்தணு தானம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் நூற்றுக் கணக்கான குழந்தைகள் பிறந்துள்ளன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, இந்த விந்தணுத் தானம் செய்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த மற்றுமொருவரும் தானம் செய்துள்ளார் எனவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதன் மூலம் இவர்கள் மூவரும் இணைந்து செய்த தானத்தின் ஊடாக எத்தனை குழந்தைகள் பிறந்துள்ளன என்பது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விந்தணு தானம் செய்தவர்களுக்கு ஏதேனும் பரம்பரை குறைபாடுகள் அல்லது நோய்கள் இருந்தால் அவை இந்த பெரும் எண்ணிக்கையிலான குழந்தைகளுக்கும் கடத்தப்பட்டிருக்கலாம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

**வரவு - செலவு...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கருத்து நிலவி வந்தது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங், வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாக மே முதலாம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் இடையீட்டின் காரணமாகவே பாடசாலை உணவு நிகழ்ச்சி, இலவச குடும்பக் கட்டுப்பாடு மருந்துகள் மற்றும் இலவச நீரிழிவு நோய் மருந்துகள் என்பன வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டன அவர் குறிப்பிட்டுள்ளார்.

**திருடன் - பொலிஸ்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், கார் ஒன்றில், முறையே 60 மற்றும் 55 வயதுடைய ஒரு தாத்தா பாட்டியும், அவர்களுடைய பேரப்பிள்ளையான ஒரு கைக்குழந்தையும் பயணித்துக்கொண்டிருக்க, பொலிஸாரால் துரத்தப்பட்ட வான், இந்தக் கார் மீது பயங்கரமாக மோதியுள்ளது.

இரு வாகனங்களும் மோதிக் கொண்டதில், அந்த தாத்தா பாட்டி, அந்த கைக்குழந்தையுடன், அந்த சந்தேக நபரும் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

இந்நிலையில், பொலிஸார் அந்த சந்தேக நபரை துரத்திச் சென்றமை தொடர்பில் பல கேள்விகள் எழுந்துள்ளன. ஏனென்றால், சந்தேக நபர் ஒருவர் பயணிக்கும் வாகனம் ஒன்றை பொலிஸார் துரத்தும் முன், அந்த வாகனத்தைத் துரத்துவதால் பொது மக்களுக்கு அபாயம் உள்ளதா என்பதை தீர்மானிக்க வேண்டும், அதற்கு முன் பொலிஸார் வாகனம் ஒன்றைத் துரத்தக்கூடாது என விதி உள்ளது.

ஆனால், பொலிஸார், அதுவும் போக்குவரத்துக்கு எதிர் திசையில் செல்லும் வாகனத்தைத் துரத்தியுள்ளனர். அதுவும், அந்த நபர் மதுபானக்கடை ஒன்றில் திருடினார் எனச் சந்தேகம் மட்டுமே ஏற்பட்டுள்ள நிலையில், நான்கு உயிர்கள் பலியாகும் வகையில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் சரியா என கேள்வி எழுந்துள்ளது.

**சபாநாயகரை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவாதத்தின் போது எதிர்க்கட்சித் தலைவரை மாத்திரம் வெளியேற்றி விட்டு, பிரதமரை வெளியாற்றாமை தொடர்பில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் மீது அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

சபாநாயகர் கிரெக் பெர்குஸ் சமமான வகையில் நிலையியற் கட்டளைச் சட்டங்களை பிரயோகிக்கவில்லை என அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.



# குடிவரவு சார்ந்த குற்ற நபர்களை மத்திய சிறைகளில் வைக்காதீர்!

## மனித உரிமை குழுக்கள் வலியுறுத்து

ஒன்ராரியோ, மே 02

குடிவரவு தடுப்பு நபர்களை மத்திய சிறைச்சாலைகளில் அனுமதிப்பதற்கான திட்டத்தை மாற்றுமாறு மனித உரிமை குழுக்கள் அரசாங்கத்திடம் கோரியுள்ளன.

குடிவரவு சார் குற்றங்கள் தொடர்பிலானவர்களை இவ்வாறான கடுமையான சூழ்நிலைகளில் தடுப்பில் வைப்பது, அவர்களது நிலைமையை மேலும் பலவீனமாக்கும் என மனித உரிமை குழுக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

வரவு செலவுத் திட்டத்திற்குள் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த மாற்றங்கள் தொடர்பில் கரிசனை கொண்டுள்ளதாக நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.



# மத்திய அரசு ஊழியர் வாரம் தோறும் 3 நாள்கள் அலுவலகம் வர வேண்டும்

## செப்டம்பர் 9ஆம் திகதி முதல் புதிய நடைமுறை

ஒன்ராரியோ, மே 02

செப்டம்பர் 9ஆம் திகதி முதல் மத்திய அரசாங்கத்தின் பொது ஊழியர்கள் வாரத்திற்கு மூன்று நாள்கள் கட்டாயமாக அலுவலகத்திற்கு வருகை தர வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன், சிரேஷ்ட அதிகாரிகள் வாரத்திற்கு நான்கு நாள்கள் அலுவலகத்திற்கு வர வேண்டியது கட்டாயம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், மத்திய அரசாங்கத்தின் பொது ஊழியர்கள் வாரத்திற்கு இரண்டு நாள்கள் அலுவலகத்திற்கு வருகை தந்தால் போதுமானது என அறிவிக்கப்பட்டிருந்தது.

கொவிட்-19 பெருந்தொற்றினைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்த அறிவிப்பு வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழகங்களில் புதிதாக பலஸ்தீன ஆதரவுக் கூடாரங்கள்

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 02

பிரிட்டிஷ் கொலம்பியாவின் மேலும் இரு பல்கலைக்கழகங்களில் பலஸ்தீன ஆதரவுக் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

விக்டோரியாப் பல்கலைக்கழகம் மற்றும் வென்கூவர் ஐலன்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலேயே புதிதாக இந்தக் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இரு பல்கலைக்கழகங்களிலும் கல்வி நடவடிக்கைகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நடப்பு விடயங்கள் தொடர்பில் ஆக்கப்பூர்வமான, நியாயமான மற்றும் கல்விசார் செயற்பாடுகளை ஊக்குவிப்பதுடன், பாரப்பசட்மற்ற, தொந்தரவில்லாத மற்றும் எந்தவகையிலான வெறுப்பு பேச்சுமற்ற சூழலில் இவை முன்னெடுக்கப்பட வேண்டும் என விக்டோரியா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர ஏற்கனவே பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பலஸ்தீன ஆதரவுப் போராட்ட கூடாரங்கள் திங்கட்கிழமை முதல் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# கூடாரங்கள் அகற்ற உத்தரவிடுவதற்கு மறுத்து விட்டது கியூபெக் நீதிமன்றம்!

கியூபெக், மே 02

மெக்கில் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள பலஸ்தீன ஆதரவுக் கூடாரங்கள் அகற்றுமாறு கோரி சில மாணவர்கள் தாக்கல் செய்த மனுவை கியூபெக் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசிக்க சிரமமாக இருப்பதாக குறிப்பிட்டு, மெக்கில் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள கூடாரங்கள் குறைந்தது 100 மீற்றருக்கு அப்பால் கொண்டு செல்லப் பணிக்குமாறு கோரி இரு மாணவர்கள் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

எவ்வாறாயினும், பல்கலைக் கழக பிரவேசத்திற்கு தடையேற்பட்டுள்ளது என்ற வாதத்தை இந்த இரு மாணவர்கள் தரப்பிலும் நிரூபிக்கத் தவறியமையால், போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக நீதிமன்றத் தீர்ப்பு அமைந்தது.



# LGBTQ+ சமூகத்திற்கான தேசிய நினைவுச் சின்னம்

## ஒட்டாவா நதிக்கு அருகில் அமைப்பு


ஒன்ராறியோ, மே02

LGBTQ+ சமூகத்திற்கான தேசிய நினைவுச் சின்னத்திற்கான நிர்மாணம் பணிகள் ஒட்டாவாவில் ஆரம்பித்துள்ளன.

1950ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரை கனடிய அரசாங்கங்களினால் டுபுடீவுஞ சமூகத்தினர் எதிர்கொண்ட பாரபட்சங்களை நினைவுகூரும் வகையில் 'தன்டர் ஹெட்' எனப்படும் இந்த தேசிய நினைவுச் சின்னம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

2025ஆம் ஆண்டு கோடைக் காலத்தில் இது திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒட்டாவா நதிக்கு அருகில் அமைக்கப்படும் இந்த நினைவுச் சின்ன அமைப்பில் பூர்வீகக் குடி மூத்தோரும் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




# திருட்டு வாகனங்கள் கடத்தப்படுகின்றமையை ஸ்கான் செய்து மட்டும் தடுத்து விட முடியாது!

ஒன்ராரியோ, மே 02

திருடப்படும் வாகனங்கள் துறைமுகங்கள் ஊடாக கொண்டு செல்வதைத் தடுப்பதற்கு கொள்கலன்களை ஸ்கான் செய்வது மாத்திரம் போதாது என ஹாலிபெக்ஸ் துறைமுக அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் திருடப்படும் வாகனங்கள் துறைமுகங்கள் ஊடாக வேறு நாடுகளுக்கு கொண்டு செல்வது தொடர்பில் தேசிய பாதுகாப்பு குழுவின் முன்னிலையில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

திருடப்பட்ட வாகனங்கள் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்படுவதனை தடுப்பதற்கு கொள்கலன்களை ஸ்கான் செய்வதற்கு மேலதிக ஸ்கானிங் கருவிகள் தேவை என ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் உள்ளடங்கலாக பலர் தெரிவித்து வருகின்றனர்.

எனினும், அதனால் பயனில்லை எனவும், இந்த ஸ்கானர்கள் திருடப்பட்ட வாகனம் எது, திருடப்படாத வாகனம் எது என்பதனை கண்டறிய உதவாது என ஹாலிபெக்ஸ் துறைமுக அதிகார சபையின் தலைவர் கூறியுள்ளார்.

# பொது வெளியில் போதைப் பொருள் தடுப்பு: மேலதிக தகவல்களை கோரும் மத்திய அரசு

ஒன்ராரியோ, மே 02



பிரிட்டிஷ் கொலம்பியாவில் பொது வெளியில் போதைப் பொருள் பயன்பாட்டை மீண்டும் குற்றமாக்குவதற்கு முன்னர், மாகாணத்திடமிருந்து மேலதிக தகவல்கள் தேவை என விடயத்துக்குப் பொறுப்பான மத்திய அமைச்சர் யாரா சக்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தீர்மானம் விரைவில் எடுக்கப்பட வேண்டும் என்பதால், விரைவில் மாகாணத்திடமிருந்து மேலதிக தகவல்களை எதிர்பார்க்கின்றார் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் தீவிர மருந்துகளின் பயன்பாட்டை குற்றமற்றதாக்கிய செயற்பாட்டை இரத்து செய்து, மீண்டும் குற்றமாக்குமாறு கடந்த வாரம் பிரிட்டிஷ் கொலம்பியாவின் சுகாதார அமைச்சர் மத்திய அமைச்சரிடம் கோரியிருந்தார்.

அமைச்சர் யாராவுக்கும், பிரதமர் ட்ரூடோவுக்கும் இந்த விடயம் குறித்து தெளிவாக விளக்கியுள்ள போதிலும், அவர்கள் தீர்மானம் எடுப்பதற்காக மேலதிக விபரங்களுக்காக காத்திருக்கின்றமை கவலையளிப்பதாக மாகாண சுகாதார அமைச்சர் ஏட்ரியன் டிக்ஸ் தெரிவித்துள்ளார்.